**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.228/2024**

20.11.2025

**D.W.1- மாயக்காள்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

மொக்கையத்தேவா் எனது கணவருக்கு தகப்பனார் ஆவார். மொக்கையத்தேவருக்கு 3 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் மூத்தவர் எனது கணவர் என்றால் சரிதான். இரண்டாவதாக பிறந்தவர் 1ம் பிரதிவாதி வீரம்மாள் என்றால் சரிதான். 3வதாக பிறந்தவர் வாதியான முத்துக்கன்னி என்றால் சரிதான். மொக்கையத்தேவரின் உடன்பிறந்த சகோதரர் நல்லிவீரத்தேவரை தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வீரம்மாளை பம்பையத்தேவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். பம்பையத்தேவருக்கும், 1வது பிரதிவாதிக்கும் பிறந்தவர் தான் 16வது பிரதிவாதி மாயக்காள் என்றால் சரிதான். பின்னர் 1வது பிரதிவாதி பம்பையத்தேவரை விவாகரத்து செய்துவிட்டு பேயத்தேவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 1வது பிரதிவாதிக்கும், பேயத்தேவருக்கும் ராஜா என்ற ஒரு மகன் மட்டும் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி ராஜா இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ராஜாவின் மனைவி 9வது பிரதிவாதி என்றால் சரிதான். ராஜாவுக்கும், 9வது பிரதிவாதிக்கும் 10 முதல் 12 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர் 4வது பிரதிவாதி வீரணன் என்றால் சரிதான். வீரணனுக்கு 5 முதல் 7 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். 3வது பிரதிவாதி ராமர் என்பவருக்கு 13வது பிரதிவாதி மலர்செல்வி மனைவி என்றால் சரிதான். மேற்படியார்கள் மகள் பெயர் 14வது பிரதிவாதி ஜெயமணி என்றால் சரிதான். வாதி எத்தனை இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது. வழக்கு சொத்துக்கள் எனது கணவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் எனது கணவரின் தகப்பனாருக்கு தனித்து பாத்தியப்பட்டது. மொக்கையத்தேவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 17.08.2012ல் தாவா 1, 2 அயிட்ட

சொத்துக்களை எனக்கு எனது கணவர் தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி தானபத்திரத்தில் எனக்கு பூர்வீக சொந்தமாய் பாத்தியப்பட்டு என் பெயரில் பட்டா ஏற்பட்டு என் கைவசம் வைத்து அனுபவம் செய்யும் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் மலைச்சாமிக்கு தாவா 3வது அயிட்ட சொத்தினை கடந்த 05.08.2002ல் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தில் எனது கணவர் எனக்கு பூர்வீக சொந்தமாய் பாத்தியப்பட்டு என் பெயரில் பட்டா ஏற்பட்டு என் கைவசம் வைத்து அனுபவம் செய்யும் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவரின் சகோதரி வீரம்மாளை எப்போது திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றாலும், எனது திருமணத்திற்கு முன்பா, பின்பா என்றாலும் தெரியாது. அதேபோன்று வாதியையும் எப்போது திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றாலும், எனது திருமணத்திற்கு முன்பா, பின்பா என்றாலும் தெரியாது. எனது கணவர் உயிருடன் இருக்கும்போதே வாதி தாவா சொத்துக்களில் பங்கு கேட்டு அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியாது. வாதியை நாட்டாபட்டியில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஊரானது எங்கள் ஊரிலிருந்து சுமார் 10 கி.மீ தூரம் இருக்குமா என்றால் தெரியாது. அ.வ.67-2018 பாகப்பிரிவினை வழக்கில் நான், எனது தம்பி, எனது தம்பி பிள்ளைகளான 4 முதல் 7 பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஒருதடைபட்ச தீர்ப்பிற்கு பிறகும் தாவா 1வது அயிட்ட சொத்தை கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கும் வரை தோட்டத்தில் உள்ள வீட்டில் குடியிருந்தோம். தாவா சொத்துக்கள் எனது கணவர் மற்றும் வாதிக்கும், 1வது பிரதிவாதிக்கும் பூர்வீக பாத்தியப்பட்டது என்பதால் வாதி கோரிய பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது கணவர் வாதிக்குரிய பாகத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் 3வது பிரதிவாதிக்கும், தாவா 2வது அயிட்ட சொத்தான 15 சென்டு மற்றும் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது சகோதரருக்கும், சகோதரரின் மகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய மற்றும் தானசெட்டில்மென்ட் பத்திரம் வாதியின் பங்கை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை

பொறுத்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவரின் தகப்பனார், எனது கணவருக்கு வாக்கிரலாக தாவா சொத்துக்களை பொறுத்து தானமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**10 முதல் 12, 14, 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.20 18:20:51 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.